

# புதிதாகப் பிறந்த ஆட்டுக் குட்டிகளுக்கான கூடுபெட்டி

4′ நீளம், 3′ அகலம் மற்றும் 4′ உயரம் கொண்ட இந்த பெட்டியின் மேற்புறம் வளைவாக இருக்கும். இப்பெட்டியின் பக்கங்களும் மேற் கூரையும் ஒளிபுகவல்ல அக்ரிலிக் தாள்களால் ஆனவை. இப்பெட்டி 1½ அடி உயரமுள்ள ஒரு மரச்சட்டத்தின் மேல் ஏற்றப்பட்டிருக்கும். குளிர் காலத்தில் குட்டிகளுக்கு வெப்பம் தருவதற்கென 100W மின்விளக்கு பொருத்தப்பட்டிருக்கும். குட்டிகள் உட்செல்ல சரிவுப் பலகையும், இப்பெட்டிக்குக் கதவும் உண்டு.

## பயன்கள்

- புதிதாக பிறந்த குட்டிகளுக்குத் தேவையான வெப்பமும், சுத்தமான சுற்றுப்புறமும் குறிப்பாகக் குளிர்காலங்களில் கிடைப்பதற்காக வடிவமைக்கப்பட்டது.
- இப்பெட்டியின் நீண்ட குறுகிய மரத்துண்டுகளாலான தரையால் குட்டிகளின் புழுக்கை மற்றும் சிறுநீர் உடனடியாக வெளியே வடிந்து விடும். பெட்டியின் பக்கவாட்டு மரச்சட்டங்களில் உள்ள துளைகள் மூலம் தேவையான காற்றோட்டம் குட்டிகளுக்குக் கிடைக்கிறது.
- குட்டிகள் பிறந்ததிலிருந்து முதல் இரண்டு வாரங்களில் ஏற்படும் இறப்பு விகிதத்தைக் குறைக்க இப்பெட்டி பெரிதும் உதவுகிறது.
- இப்பெட்டியினால் கிடைக்கப் பெறும் தூய்மையான சுற்றுப்புறமும் உலர் தரையும் குட்டிகள் நன்கு எடை கூட ஏதுவாக அமையும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**கால்நடைப் பண்ணை வளாகம்**
மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051.
தொலைபேசி: +91–44–2555 1571
மின்னஞ்சல் : urf@tanuvas.org.in

**விலை**

**₹ 19,500/-**
**(18% வரி இல்லாமல்)**